For Candidates Admitted From 2015-2017

2015-17 BTA 43C ROLL NO..................

பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் நான்காம் பருவம்

அற இலக்கியம்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

## பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. திருவள்ளுவரின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
2. கேட்டாப் பிணிக்கும் சொல் குறித்த வள்ளுவர் கருத்தை எழுதுக.
3. நாலடியார் - குறிப்பு வரைக.
4. நிலையாமை குறித்த நாலடியார் கருத்துகள் யாவை?
5. நான் மணிக்கடிகை – குறிப்பு வரைக.
6. விளம்பி நாகனார்- குறிப்பு வரைக.
7. கல்விச் செல்வம் குறித்த இனியவை நாற்பது கருத்து யாது?
8. மானம் படவரின் வாழாமை முன் இனிதே – விளக்குக.
9. காதலர்களின் கடமை குறித்த நன்னெறியின் கருத்து யாது?
10. கீழோருக்குரிய குணமாக நன்னெறி கூறுவது என்ன?

## பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. வள்ளுவர் கூறும் குறிப்பறிதல் குறித்த இலக்கணம் யாது?

**(அல்லது)**

ஆ. பெரியாரைப்பிழைத் தொழுகுவார் நிலை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?

12. அ. மாண்டார் அறம் பற்றிய நாலடியார் கருத்து யாது?

**(அல்லது)**

ஆ. 'காதலால் சொல்லுங் கடுஞ்சொல் 'எத்தகையது என்று நாலடி வழி எழுதுக.

13. அ. மழையைப் பற்றிய நான்மணிக்கடிகை கருத்து யாது?

**(அல்லது)**

ஆ. 'வெகுளி' குறித்து நான்மணிக்கடிகை கூறுவது என்ன?

14. அ. 'ஊன் உண்பது' குறித்து இனியவை நாற்பது நவில்வது என்ன?

**(அல்லது)**

ஆ. 'குழவிபிணி இன்றி வாழ்தல் இனிதே' - விளக்குக.

15. அ. கொடை கொடுப்பது பற்றிய நன்னெறி கருத்து யாது?

**(அல்லது)**

ஆ. கல்லாதார் நட்பு எத்தகையது?

## பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. தூதுரைப்பான் பண்புகளாக வள்ளுவர் வரையறுத்த பாங்கினை விவரி.
17. 'பொறையுடைமை' குறித்து நாலடியார் நவிலும் செய்திகளை எடுத்துரைக்க.
18. 'நான்மணிக்கடிகை' எடுத்தியம்பும் அறவுரைகள் பற்றி விளக்குக.
19. 'இனியவை நாற்பது' கூறும் நன்மை தரும் செயல்களை எடுத்துரைக்க.
20. அறிவுடையோர் செயல்களாக 'நன்னெறி' எடுத்தோதும் செய்திகளை விளக்குக.

***************

**For Candidates Admitted From 2018**

2018 BTA 23C

ROLL NO..................

பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவம்

## இலக்கணம் - நன்னூல் - சொல்

நேரம் - 3 மணி

மொத்த மதிப்பெண்கள் -75

### பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. மூவகை மொழிகள் யாவை?
2. ஆகுபெயர் விளக்கம் தருக.
3. வினைமுற்றின் இரு வகைகளைக் குறிப்பிடுக.
4. பெயரெச்சத்தின் இலக்கணம் தருக.
5. ஒன்றொழிப் பொதுச் சொல்லை வரையறுக்க.
6. உவம உருபுகள் எவை என்று குறிப்பிடுக.
7. இடைச்சொல் எத்தனை வகைப்படும்? அவற்றுள் எவையேனும் இரண்டனைக் கூறு.
8. ' அம்ம' எனும் இடைச்சொல் தரும் பொருள்களைக் கூறுக.
9. ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் எவை?
10. ஓரறிவு உயிரகளைக் கூறுக.

### பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. சொல்லின் பொது இலக்கணம் தருக.

**(அல்லது)**

ஆ. வழக்கின் வகைகளைக் கூறி விளக்குக.

12. அ. வினைச்சொல்லின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

**(அல்லது)**

ஆ. முற்றெச்சத்தை வரையறுக்க.

13. அ. எச்சத்தின் வகைகளைக் கூறி விளக்குக.

**(அல்லது)**

ஆ. வழுக்களின் வகைகளை எடுத்துரைக்க.

14. அ. இடைச்சொல்லின் இலக்கணம் தருக.

**(அல்லது)**

ஆ. ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை விவரிக்க.

15. அ. உரியியலில் இடம்பெறும் உயிர்ப்பொருள்கள் குறித்து விளக்குக.

**(அல்லது)**

ஆ. பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் பற்றிவிளக்கி வரைக்க.

### பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. சொல்லின் வகைகளைக் கூறி விளக்குக.
17. வினையெச்ச வாய்பாடுகளை விளக்கிக் கட்டுரை வரைக.
18. தொகை நிலைத் தொடர் வகைகளை விளக்குக.
19. அசைச் சொற்களை விளக்கிக் கட்டுரை வரைக.
20. உரியியலில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

For Candidates Admitted From 2018

REG. NO...................

2018 BTA 24A

பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவம்

இக்கால இலக்கியம் - II

மொத்த மதிப்பெண்கள் -75

நேரம் - 3 மணி

பகுதி – அ ( 10 X 2 = 20 )

பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.

1. கவிமணியின் படைப்புகளுள் எவையேனும் இரண்டனைக் கூறுக.
2. ஆசியஜோதி எதைத்தழுவி எழுதப்பட்டது?
3. ' கனியான பின்னும் நுனியில் பூ ' கதையின் ஆசிரியரைக் கூறுக.
4. 'பொழுதுபோகாமல் ஒரு சதுரங்கம் ' கதையில் இடம்பெறும் இரு பாத்திரங்களைக் குறிப்பிடுக.
5. பருக்கை நாவலின் ஆசிரியரைக் குறிப்பிடுக.
6. சாகித்ய அகாதெமியின் 2015 ஆம் ஆண்டுக்கான யுவபுரஸ்கார் விருது பெற்ற புதினம் எது?
7. நந்தன் கதை எந்நூலைத் தழுவி எழுதப்பட்டது?
8. நந்தன் செல்ல விரும்பிய கோயில் எது?
9. தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் மிகுந்த செல்வாக்குப் பெற்று இருந்ததை எக்கல்வெட்டின் வழி பெரிதும் உணரலாம்?
10. மொழி விடுதலையைச்சமூக விடுதலையின் கூறாக முன்வைத்தவர் யாரென்று கூறுக.

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.

11. அ. ஏழைச்சிறுவனுக்குப் புத்தர் வழங்கிய அறிவுரைகளை விவரிக்க.

(அல்லது)

ஆ. பிறப்புளதேல் இறப்புண்டு என்று புத்தர் போதித்த வரலாற்றைக் கூறுக.

12. அ. எண்கள் தேவையற்ற உரையாடல்கள் கதையின் மையக் கருத்தைக் கூறுக.

(அல்லது)

ஆ. ஒரு சிறு இசை கதையின் மையப்பாத்திரத்தைக் குறிப்பிட்டு அப்பாத்திரத்தைத் திறனாய்வு செய்க.

13. அ. பருக்கை புதினத்தின் பெயர்ப்பொருத்தத்தை ஆய்க.

(அல்லது)

ஆ. பருக்கை புதினத்தில் சக்தியின் பாத்திரம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது?

14. அ. நந்தன் கதையில் இடம்பெறும் அபிராமி பாத்திரத்தை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ. நந்தன் நெருப்பில் எரிந்து போன அவலநிலையைக் கூறுக.

15. அ. பாரதிதாசனின் மொழிஉணர்ச்சியை 'வழித்தடங்கள்' கட்டுரை வழிவிளக்குக.

(அல்லது)

ஆ. இன்றைய தமிழ் மரபு ஆக்கத்தில் திருக்குறள் பெறும் இடத்தை ஆய்க.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி

16. சித்தார்த்தனின் துறவு வாழ்க்கையை விவரித்துக் கட்டுரை வரைக.
17. சந்தனம் கதையின் தலைப்புப் பொருத்தத்தை ஆய்க.
18. சமூகத்தின் அவல நிலையைப் பருக்கை புதினம் உணர்த்தும் பாங்கை விவரிக்க.
19. நந்தனின் பக்தித் திறத்தை விளக்கிக் கட்டுரை வரைக.
20. சங்க இலக்கியத்தில் சமூகவியல் ஆய்வுகள் பெறும் இடம் குறித்து 'வழித்தடங்கள்' கட்டுரை வழி விளக்குக.

-----------------

**For Candidates Admitted From 2015- 2017**

**15-17 BTA 45A** **ROLL NO...................**

**பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019**

**தமிழ் இலக்கியம்** **நான்காம் பருவம்**

**இதழியல்**

**நேரம் - 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் -75**

**பகுதி – அ ( 10 X 2 = 20 )**

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. பத்திரிகைப் பெண்ணை பாரதிதாசன் எவ்வாறு வாழ்த்தி வரவேற்கின்றார்?
2. பத்திரிகைச் சுதந்திரம் என்பது என்ன?
3. தமிழகத்தில் அச்சகம் எந்த ஆண்டு, யாரால், எங்கு அமைக்கப்பெற்றது?
4. அவதூறு, சட்ட வழக்கிற்குட்பட்டது – விளக்கம் தருக.
5. செய்தியாளர்க்கும் செய்திக்கும் உள்ள தொடர்பு யாது?
6. ஐந்து' W 'க்களும் ஒரு' H ' ம் என்று கூறப்படுவன எவை?
7. செய்தியின் மூன்று பகுதிகள் யாவை?
8. பக்க அமைப்பின் நோக்கங்களைக் குறிப்பிடுக.
9. விளம்பரங்களினால் ஏற்படும் தீமைகளைச் சுட்டுக.
10. A.B.C, AD -இக்கலைச் சொற்களுக்குத் தமிழில் விளக்கம் தருக.

**பகுதி – ஆ ( 5 X 5 = 25 )**

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. ஆட்சியில் இதழ்களின் பங்கு குறித்துக் கூறுக.

**(அல்லது)**

ஆ. வளர்ந்து வரும் இதழியில் பணிகளை விளக்கியுரைக்க.

12. அ. இந்திய விடுதலை இயக்கமும் இதழ்களும் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ. இதழ்கள் தொடங்குவதற்குரிய வழிமுறைகள் யாவை?

13. அ. செய்தியாளரின் பண்புகளைப் பகர்க.

**(அல்லது)**

ஆ. இதழியலில்'பேட்டி'பெறும் இடத்தினை விளக்கி எழுதுக.

14. அ. செய்தி ஆசிரியரின் பணிகள் குறித்துக் கூறுக.

**(அல்லது)**

ஆ. அச்சுப்படி திருத்த முறைகளைச் சுட்டி விளக்குக.

15. அ. தற்காலத் தமிழ் இதழ்கள் சிலவற்றைக் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ. நல்ல இதழ்கள் எவை? எப்படி? விளக்குக.

**பகுதி – இ ( 3 X 10 = 30 )**

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. இதழ்களின் பணிகள், கடமைகள், பொறுப்புகள் குறித்துக் கட்டுரைக்க.
17. பத்திரிகைச் சட்டங்கள் பற்றி விளக்கியுரைக்க.
18. செய்தி நிறுவனங்கள் குறித்து விரித்துரைக்க.
19. செய்தியின் கட்டமைப்பு குறித்துக் கட்டுரை வரைக.
20. தற்காலத்தமிழ் இதழ்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் குறித்து விளக்குக.

***************

For Candidates Admitted From 2015-2017

2015-17 BTA 44C ROLL NO..................

பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் நான்காம் பருவம்

காப்பியங்கள்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. புறஞ்சேரியில் தங்கியிருந்தோர் யாவர்?
2. முத்திற மணிகள் யாவை?
3. அனுமனிடம் சீதை கொடுத்தனுப்பிய அடையாளப்பொருள் என்ன?
4. இராமன் மீது ஆணையிட்டு சீதை கூறியது யாது?
5. அப்பூதியடிகள் செய்த அறச்செயல்களைக் குறிப்பிடுக.
6. மூத்த திருநாவுக்கரசருக்கு நேர்ந்தது என்ன?
7. சீவகசிந்தாமணியை மணநூல் என்றழைப்பது ஏன்?
8. ஐஐங்காவதம் – பொருள் தருக.
9. தேம்பாவணி- நூற்குறிப்புரைக்க.
10 .சீறாப்புராணத்திலுள்ள காண்டங்களைக் குறிப்பிடுக.

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. கவுந்தியடிகள் இராமனை எவ்வாறு வாழ்த்தினார்?

**(அல்லது)**

ஆ. அறவணவடிகள் புத்த தருமத்தைத் தொகுத்துரைத்தத் திறம் குறித்தெழுதுக.

12. அ. அனுமனுக்கு சீதை விடைகொடுத்து அனுப்பியபொழுது கூறியவை யாவை?

**(அல்லது)**

ஆ. சீதையின் ஆதங்கத்தைப் புலப்படுத்துக.

13. அ. அப்பூதியடிகளின் பெருமகிழ்விற்கான காரணத்தை விளக்குக.

**(அல்லது)**

ஆ. அப்பூதியடிகளின் புராணத்தில் அப்பர் நிகழ்த்திய அற்புதச் செயலை விவரி.

14. அ. சுதஞ்சணன் கூறிய மந்திரங்களைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ. பதுமையின் துன்பத்தைப் புலப்படுத்துக.

15. அ. யூதேயா நாட்டின் இயற்கை வளத்தை எடுத்துரைக்க.

**(அல்லது)**

ஆ. மானின் பாசப்போராட்டத்தை விவரி.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. காவலன் பேரூரைக் கோவலன் கண்டு மகிழ்வெய்திப் பெயர்ந்ததை விவரித்தெழுதுக.
17. சீதையைக் கண்ட அனுமன் அவளிடம் கூறியவை யாவை?
18. அடியார் வழிபாடு மூலம் இறையை அடையலாம் என்பதை அப்பூதியடிகள் புராணத்தின் வழி விளக்குக.
19. சீவகன் பதுமையை மணம் முடித்த பாங்கை வெளிப்படுத்துக.
20. மானுக்குப் பிணை நின்ற படலம் தரும் படிப்பினையை விரிவாக எழுதுக.

***************

2015-17 BTA 63C ROLL NO...................

பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் ஆறாம் பருவம்

மொழிப்பெயர்ப்பியல்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. 'ஜான் ட்ரைடனின் ' மொழிபெயர்ப்பு வரையறை யாவை?
2. மொழி என்றால் என்ன?
3. மொழிபெயர்ப்புக் குறித்து 'நைடா' கூற்றினைத் தருக.
4. மாலின் ஓஸ்கி – மொழிபெயர்ப்பு குறித்தக் கருத்துக்கள் யாது?
5. மு.கோவிந்தராசனின் மொழிபெயர்ப்பு கூறுகளைச் சுட்டுக.
6. மொழிபெயர்ப்பின் நெறிமுறைகளை எடுத்துரைக்க.
7. நிகரன் என்றால் என்ன?
8. கலைச் சொல்லாக்கம் என்பதின் பொருள் யாது?
9. சாகித்ய அகாதெமியின் பணியினைச் சுட்டுக.
10. 'நைடதம் ' நூலின் ஆசிரியர் யார்?

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. மொழிபெயர்ப்பின் தனித்துவம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. 'இலக்கிய மொழிபெயர்ப்பு ' என்றால் என்ன?

12. அ. மொழிபெயர்ப்பின் வகையினைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ.வெ. சாமிநாத சர்மாவின் மொழிபெயர்ப்பு விளக்கங்கள் குறித்து எடுத்துரைக்க.

13. அ. மொழிபெயர்ப்பில 'மணவை முஸ்தபா' பெறுமிடம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. தியோடர் சவேரியின் எதிரெதிர்க் கோட்பாடுகள் தரும் விளக்கம் யாவை?

14. அ. நிகரன்களின் விளக்கம் தருக.

(அல்லது)

ஆ. மொழிபெயர்பபில் மொழியியல் சிக்கல்கள் குறித்து விளக்குக.

15. அ. மொழிபெயர்ப்பில் தனிமனித நோக்கத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. பௌத்த சமய மொழிபெயர்ப்புகள் குறித்து எழுதுக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. மொழிபெயர்ப்பின் தோற்றம் குறித்து ஆய்க.
17. மொழிபெயர்ப்பு வகைகளின் பாகுபாடுளைத் தொகுத்து எழுதுக.
18. மொழிபெயர்ப்பிக் கோட்பாடுகளை விவரிக்க.
19. மொழிபெயரப்பில் மொழியியல் சிக்கல்கள் குறித்து கட்டுரை வரைக.
20. தமிழில் மொழிபெயரப்புகள் தோன்றிய விதத்தினைத் தொகுத்துரைக்க.

***************

2015-17 BTA 66S ROLL NO...................

பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் ஆறாம் பருவம்

படைப்பிலக்கியப் பயிற்சி - II சிறுகதை

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. சிறுகதை இலக்கியம் – குறிப்புரைக்க.
2. தி.ஜானகிராமனின் சிறுகதை அனுபவம் குறித்துக் கூறுக.
3. சிறுவர்களுக்கான படைப்புகள் எங்ஙனம் அமைய வேண்டும்?
4. மொழிபெயர்ப்புக் கதைகளின் இயல்புகளை இயம்புக.
5. மர்மக்கதை இன்னது என விளக்குக.
6. வரலாற்றுக் கதைகளில் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.
7. நாட்டுப்புற வாய்மொழிக் கதைகளின் தன்மைகளைத் தெரிந்துரைக்க.
8. சிறுவர்களுக்குக் கதை எழுதுவது எப்படி?
9. ∴ பாண்டசி என்றால் என்ன?
10. அறிவியல் கதையாசிரியர்களில் நால்வரைக் கூறுக.

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ.கு.அழகிரிசாமி சிறுகதைகளின் நோக்கும் போக்கும் குறித்து விளக்குக.

**(அல்லது)**

ஆ. சிறுகதை இலக்கியம் பற்றிய உங்களின் கருத்துகளை விளக்கியுரைக்க.

12. அ. சிறுவர்களுக்கான படைப்புகளில் பெ.தூரனின் பங்களிப்பினை விவரிக்க.

**(அல்லது)**

ஆ. மொழிபெயர்ப்புக் கதைகள் குறித்த சரஸ்வதி ராம்நாத்தின் கருத்துகளை எழுதுக.

13. அ. சமூகக் கதைக்கும் வரலாற்றுக் கதைக்கும் உள்ள வேறுபாட்டினை அறிந்துரைக்க.

**(அல்லது)**

ஆ. நகைச்சுவைக் கதைகளின் தன்மைகளைச் சுட்டி விளக்குக.

14. அ. தழுவல் கதை என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

ஆ. பழங்கதை என்பது யாது? எடுத்துக்காட்டு தந்து விவரிக்க.

15. அ. அறிவியல் செய்திகளைக் கதையாக்குவது எப்படி? விளக்கம் தருக.

**(அல்லது)**

ஆ. ∴பாண்டசி சிறுகதை ஒன்றைப் படைக்க.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் யாவர்? அவர்தம் படைப்புகள் குறித்துக் கூறுக.
17. நீங்கள் படித்த மொழிபெயர்ப்புக் கதையைச் சுட்டிக்கருத்துரைக்க.
18. சமூகக் கதைகளின் இன்றியமையாமையும் தேவையும் குறித்துக் கட்டுரைக்க.
19. நாட்டுப்புற வாய்மொழிக்கதைக்குச் சான்று ஒன்று தருக.
20. அறிவியல் கதை ஒன்றினைப் படைக்க.

***************

For Candidates Admitted From 2015-2017

2015 BTA 64C ROLL NO..................

பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019
தமிழ் இலக்கியம் ஆறாம் பருவம்
பதிப்பியல்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )
பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.

1. பதிப்பித்தல் பற்றிய அறிமுகம் தருக.
2. சீனாவைச் சாரந்த பி.ஷெங் பதிப்புப்பணியில் இன்றியமையாதவர் எவ்வாறு?
3. H.A. கிருஷ்ணப்பிள்ளை பதிப்பித்த நூல்களைக் குறிப்பிடுக.
4. ஆறுமுக நாவலரின் முதல் பதிப்பு எது?
5. தமிழ் இலக்கணங்களில் முதலில் அச்சேறிய நூல் எது?
6. புத்த மதம் சார்ந்து எழுதப்பட்ட ஒரே இலக்கண நூல் எது?
7. சிலப்பதிகாரத்தை முதலில் பதிப்பித்தவர் யார்?
8. திருக்குறள் யாரால் எப்பொழுது முதலில் பதிப்பிடப்பெற்றது?
9. பெரியார் சிந்தனைகள் யாரால் எப்பொழுது முதலில் தொகுக்கப்பெற்றது?
10. விளக்கம் தருக. - செம்பதிப்புகள்.

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )
அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.

11. அ. பதிப்பாசிரியரின் தகுதிகளை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ. பதிப்புப் பணியில் ஐரோப்பியரின் பணியினை மதிப்பிடுக.

12. அ. ஆறுமுக நாவலரின் பதிப்புப் பணியினை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ. சிறுகுறிப்பு வரைக : முகவை இராமானுஜக் கவிராயர்.

13. அ. கணேச அய்யரின் இலக்கணப்பதிப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. இலக்கணப் பதிப்புகள் அழியாமல் எவ்வாறு காக்கலாம்?

14. அ. பத்துப்பாட்டு உரைப்பதிப்புகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

ஆ. மணிமேகலை உரைப்பதிப்புகள் பற்றி விளக்கியுரைக்க.

15. அ. சீனிவிசுவநாதனின் பாரதி படைப்புகளின் பதிப்புப்பணி பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ. கு.ப.ரா. படைப்புகளின் பதிப்புகள் குறித்து எழுதுக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )
பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி

16. தமிழ்ப்பதிப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விவரிக்க.
17. உ.வே சாமிநாத அய்யரின் உரைப்பதிப்புகள் குறித்து எழுதுக.
18. சிலப்பதிகார உரைப்பதிப்புகளைக் குறிப்பிட்டு விவரிக்க.
19. சங்க இலக்கியப் பதிப்புகள் குறித்து விவரிக்க.
20. அயோத்திதாசர் சிந்தனைகளின் செம்பதிப்புகள் பற்றி விளக்கி வரைக.

****************

**2015-17 BTA 61C** **ROLL NO..................**

**பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019**

**தமிழ் இலக்கியம்** **ஆறாம் பருவம்**

**சங்க இலக்கியம் –அகம்**

**நேரம் - 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் -75**

பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. ஐந்து பொழுதுகளாக அள்ளூர் நன் முல்லையார் குறிப்பிடுவன யாவை?
2. தலைவியைப் பார்த்து சிரித்தது யாது?
3. தேன் மயங்கு பாலினும் இனியது எது?
4. வேங்கை மலரைக் கொய்வோர் பாடும் பண் யாது?
5. யானை எந்த மரத்தினை முறித்துவிட்டு எந்த மரத்தின் நிழலில்படுத்திருக்கும்?
6. மயில் கொடிகள் பறக்கின்ற குன்றம் எது?
7. திருமணத்தின் போது வீட்டின் முன்பு எதைப்பரப்பி அழகுபடுத்துவர்?
8. சூதாடு களத்தில் உருட்டும் காய்களைப் போன்றவை யாவை?
9. "ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை எளிய என்னார்', எந்நிலை?
10. தலைவன் அருவியில் நீராடி. அசோக மர நிழலில் இருந்தபெண்களிடம் என்ன கூறினான்.

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. அள்ளூர் நன்முல்லையாரின் பாலைத்திணைப் பாடல்களின் கருத்தை எழுதுக.

**(அல்லது)**

ஆ. ஓக்கூர் மாசாத்தியார், கச்சிப்பேட்டு நன்னாகையாரின் பாடல்களை ஆய்க.

12. அ. ஐங்குறு நூற்று அன்னாய் வாழி பத்தில் தலைவி கூற்றினை விவரிக்க.

**(அல்லது)**

ஆ. செலவு பத்தில் பாலை வழியின் தன்மைகளை எடுத்துரைக்க.

13. அ. நற்றிணையில் குறிஞ்சித் திணைப் பாடல்களை ஆராய்க.

**(அல்லது)**

ஆ. பிரிவிடை ஆற்றாள் என்ற தோழிக்கு தலைவி கூறியதாக நக்கீரர் உரைப்பன யாவை?

14. அ. "சுடர்த் தொடிஇ கேளாய்'' எனத்தொடங்கும் குறிஞ்சிக் கலிப்பாடல் தரும் இலக்கிய இன்பத்தைச் சுட்டுக.

**(அல்லது)**

ஆ.சூதாட்டத்தின் மூலம் கலித்தொகை உணர்த்தும் அறிவுரை யாவை?

15. அ. தலைவியின் மெலிவுக்கு வருந்திய செவிலித்தாய்க்கு தோழி கூறியவற்றை எழுதுக.

**(அல்லது)**

ஆ. யானை வருகையையும், தலைவன் தலைவியை அதினின்று காத்த திறத்தையும் புலப்படுத்துக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. வெள்ளி வீதியார் பாடல்களின் கருத்தினை எடுத்துரைக்க.
17. ஜங்குறு நூற்றில் தோழியின் மதி நுட்பத்தை ஆராய்க.
18. அகநானூறு பாடல்களில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளை விவரிக்க.
19. முக்கோற்பகவன் செவிலிக்கு இல் வாழ்க்கையின் இயல்புரைத்ததை விளக்குக.
20. குறிஞ்சிப்பாட்டின் தனிச்சிறப்பு குறித்து ஒரு கட்டுரை வரைக.

***************

**2015-17 BTA 62C** **ROLL NO...................**

**பி.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019**

**தமிழ் இலக்கியம்** **ஆறாம் பருவம்**

**சங்க இலக்கியம் - புறம்**

**நேரம் - 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் -75**

**பகுதி – அ ( 10 X 2 = 20 )**

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. புறநானூறுக்கு கடவுள் வாழ்த்து பாடிய புலவர் யார்?
2. குழவி இறப்பினும் ,ஊன்தடி பிறப்பினும் ‘ஆள் அன்று’ என்று வாளின் தப்பார்- என்பது யார் கூற்று?
3. அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின் –என்று தொடங்கும் பாடல் யாருடையது?
4. ‘அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே –என்று அறிவுறுத்திய புலவர் யார்?
5. பதிற்றுப்பத்து பெயர் காரணம் தருக.
6. துறை, வண்ணம்,தூக்கு,பெயர் போன்றவை குறிப்பிடும் நூல் எது?
7. பரிபாடலில் கிடைக்கப்பெற்ற பாடல்கள் எத்தனை?
8. பாண்டியர்களின் பழக்கவழக்கங்களைப் பற்றி கூறும் நூல் எது?
9. பாலையாழ் பற்றி வருணிக்கும் நூல் எது?
10. பொருநராற்றுப்படையைப்பாடிய புலவர் யார்?

**பகுதி – ஆ ( 5 X 5 = 25 )**

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. தான் ஒருவன் பொருது எழுவர் வீரம் அடங்கச்செய்த செழியனின் இயல்பை விவரி.

**(அல்லது)**

ஆ. ‘களிறு எறிந்து பட்டனன்’ என்னும் உவகைக்கலுழ்ச்சிப் பாடலினை விவரி.

12. அ. வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடிய மதுரைக்குமரனாரின் கருத்தினை ஆய்க.

**(அல்லது)**

ஆ. வேட்டுவ சிறுவர்களின் இளம்பருவச்செயல் குறித்து ஆலத்தூர்க்கிழார் பாடியது யாது?

13. அ.நில்லாத்தானை – பாடற்கருத்தினை விவரி.

**(அல்லது)**

ஆ. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் வீரச்செயலை விவரி.

14. அ.வையை ஆறு குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ.செவ்வேள் தலைவனின் கையில் இருந்த பொருட்கள் யாவை?

15. அ.பாடினியின் கேசாதிபாத வருணனை குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ.சோழ நாட்டின் வளமையைத் தொகுத்துரைக்க.

**பகுதி – இ ( 3 X 10 = 30 )**

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகா விடையளி**

16. புறநானூற்று பாடல்கள் உணர்த்தும் சமுதாயத்தினை ஆராய்க.
17. புறநானூற்று பாடல்கள் வழி மன்னனின் ஆட்சி திறத்தையும் வீரச்சிறப்பினையும் கட்டுரைக்க.
18. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.
19. செவ்வேளின் புராணச்செய்திகளைத் தொகுத்துரைக்க.
20. கரிகாற்சோழனின் விருந்தோம்பல், பரிசில் நல்குதல், கொடைச்சிறப்புகளை விளக்குக.

***************

2015-17 BTA 6EL ROLL NO..................

பி.ஏ. /பி.எஸ்சி/ பி.காம்/பி.காம் சி.ஏ. / பி.பி.எ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் ஆறாம் பருவம்

தமிழ் இலக்கிய வரலாறு– II

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

## பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. புதுக்கவிதையைத் தமிழ் மண்ணில் பயிரிட்டவர்கள் யாவர்?
2. எஸ்ரா பவுண்டு – குறிப்புரைக்க.
3. தொல்காப்பியர் கூறும் உரைநடையின் நான்கு வகைகள் யாவை?
4. உ.வே.சா.வின் உரைநடைத்திறத்திற்குச் சான்றாகும் நூல்கள் எவை?
5. சிறுகதைக்கு எட்கர் ஆலன்போ கூறும் இலக்கணம் யாது?
6. தமிழில் நாவல் இலக்கிய வகையின் முதல்வர்களைத் தெரிந்துரைக்க.
7. தமிழிசைக் கருவிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.
8. நாடகம்- சொற்பொருள் விளக்கம் தருக.
9. சொற்பொழிவு நூல்களுக்கு நான்கு சான்றுகள் தருக.
10 .உலகத் தமிழ் மாநாடுகள் குறித்துக் கூறுக.

## பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. புதுக்கவிதையின் பயன் குறித்து விளக்கியுரைக்க.

(அல்லது)

ஆ. புதுக்கவிதை புரியாது போவதற்கான காரணங்களைச் சுட்டி விளக்குக.

12. அ. உரையாசிரியர்களின் உரைநடைக் கூறுகளைக் குறிப்பிட்டு விவரிக்க.

(அல்லது)

ஆ.ஐரோப்பியர் கால உரைநடை வளர்ச்சியினை வெளிப்படுத்துக.

13. அ.தமிழ்ச் சிறுகதை உலகில் புதுமைப்பித்தன் பெறும் இடத்தினை அறிந்துரைக்க.

(அல்லது)

ஆ.மொழிபெயர்ப்பு நாவல்கள் குறித்துக் கூறுக.

14. அ.சங்ககால இசைத்தமிழ் வரலாற்றினை விளக்கியுரைக்க.

(அல்லது)

ஆ.பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாடகம் புத்துயிர் பெற்றமையை விளக்குக.

15. அ.இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சியினை வெளிப்படுத்துக.

(அல்லது)

ஆ. தமிழில் பயண இலக்கியச் செல்வாக்கு பற்றி எழுதுக.

## பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகா விடையளி**

16. புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.
17. உரைநடை இலக்கிய இயல்புகளைச் சுட்டி விவரிக்க.
18. தமிழில் தாளிகைகள் பெறும் இடத்தினை விளக்கியுரைக்க.
19. நாடகத் தமிழ் வளர்ச்சியினை விளக்கி எழுதுக.
20. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வளர்ச்சியினைச் சுருக்கியுரைக்க.

***************